

# வெள்ளாட்டு இனங்கள்

## தமிழ்நாட்டு இனங்கள்



கன்னி ஆடு



கொடி ஆடு



சேலம் கருப்பு



மோளை ஆடு

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை – 600 051

# வெள்ளாடு வளர்ப்பின் சிறப்புகள்

- குறைந்த முதலீடு .
- ஒரு ஈற்றில் 2 முதல் 3 குட்டிகள் வரை ஈனும்.
- இரண்டு வருடத்தில் 3 முறை குட்டிகளை ஈனும் .
- 15 முதல்  18 மாதங்களில் இனவிருத்திக்குத் தயாராகிவிடும்.
- இறைச்சி, பால், தோல் மற்றும் உரத்திற்காக வளர்க்கலாம்.
- சுய வேலைவாய்ப்பிற்கு உகந்த தொழில்.






# வெள்ளாடுகளைத் தேர்வு செய்தல்

## தரமான கிடா ஆடுகளின் தோற்றம் மற்றும் பண்புகள்

- ✪ கூடுதலான உயரம்
- ✪ கால்களில் பலம்
- ✪ நீளமான உடல் வாகு
- ✪ அகன்ற மார்புகள்
- ✪ ஆண் உறுப்புகள் பெருத்து, உடலோடு ஒட்டியிருத்தல்
- ✪ விதைப்பையின் சுற்றளவு 25–35 செ.மீ.

## தரமான பெட்டை ஆடுகளின் தோற்றம் மற்றும் பண்புகள்

- ✪ நீண்ட பருமனான உடல் வாகு
- ✪ குறுகிய தோள் பகுதி
- ✪ அகன்ற இடுப்பு பகுதி
- ✪ மிருதுவான மடி
- ✪ கறவைக்குப்பின் சுருங்கக்கூடிய மடி
- ✪ மிருதுவான, பளபளப்பான தோல்

## ஆடுகளை தேர்வு செய்வதில் கவனத்தில் கொள்ள வேண்டியவை

- ✪ தோற்றம் மற்றும் பாரம்பரிய குணாதிசயங்கள்
- ✪ இரண்டு பற்கள் கொண்ட ஆடுகள்
- ✪ இரண்டு குட்டிகளை ஈனும் பெட்டைகள்
- ✪ நல்ல எடையுடைய கிடாக்கள்









# வெள்ளாடுகளின் வயதை கண்டறிதல்

- குட்டிகள் பிறக்கும்போது கீழ்த் தாடையில் முன்பக்கத்தில் 6 வெட்டுப் பற்கள் (பால் பற்கள்) இருக்கும்.
- மேல்தாடையில் ஈறுகள் மட்டுமே காணப்படும்.
- ஆடுகளின் பல்வரிசை விபரம் :
  தற்காலிக பற்கள் – 20; நிரந்தர பற்கள் – 32.

| வயது | | பற்கள் விபரம் |
|---|---|---|
| 3 மாத வயது வரை | – | பால்பற்கள் |
| | | நிரந்தர பற்கள் (கீழ்த் தாடையில்) |
| 1½ வயது | – | 2 வெட்டுப்பற்கள் |
| 2½ வயது | – | 4 வெட்டுப்பற்கள் |
| 3½ வயது | – | 6 வெட்டுப்பற்கள் |
| 4½ வயது | – | 8 வெட்டுப்பற்கள் |



ஆடுகளில் பல் அமைப்பைக் கொண்டு வயதைக் கண்டறிதல்



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை – 600 051

# ஆடுகளை வளர்க்கும் முறைகள்

## மேய்ச்சல் முறை



- தினமும் 8 – 10 மணி நேரம் மேய்ச்சலுக்கு அனுப்புதல்.
- திறந்த வெளி மேய்ச்சல் நிலம் தேவை.
- இரவு நேரங்களில் தங்குவதற்கு சிறிய பட்டிகள் அமைக்க வேண்டும்.

## கொட்டில் முறை



- கொட்டகையிலேயே தீவனம் கொடுத்து வளர்த்தல்.
- ஒவ்வொரு ஆட்டிற்கும் 10–15 சதுர அடி கூரை வேய்ந்த இடம் தேவை.
- மேலும் 25 – 30 சதுர அடி திறந்த வெளியும் தேவை.

## மேய்ச்சலுடன் கூடுதல் தீவனம் இடும் முறை



- தினமும் 6 – 8 மணி நேர மேய்ச்சலுக்குப் பிறகு கொட்டகைகளில் அடைத்து பசுந்தீவனம் மற்றும் சிறிது அடர்தீவனம் அளித்து பராமரித்தல்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை – 600 051

# ஆடுகளுக்கான கொட்டகை அமைத்தல்



## கொட்டகை அமைக்கும்போது கவனிக்க வேண்டியவை

- மேட்டுப் பாங்கான இடவசதி.
- கொட்டகையைச் சுற்றிலும் தீவன மரங்கள் வளர்த்தல்.
- சுத்தமான குடிநீர் வசதி (1 அடி அகலம், 1 அடி ஆழம், 5 அல்லது 6 அடி நீளத்தில் தண்ணீர் தொட்டி).
- உறுதியான, ஈரம் உறிஞ்சும் தரை.
- அடர் தீவனத்திற்கென ஒரு தொட்டியும், புல், மரத்தழைகள் அளிப்பதற்கு மற்றொரு தொட்டியும் வைக்க வேண்டும். தீவனத்தொட்டி சுமார் 1 மீ. உயரத்தில் இருப்பது நல்லது.
- கொட்டகையின் நீண்ட முகப்பு கிழக்கு மேற்காக அமைக்க வேண்டும்.
- கொட்டகையின் உயரம் 9 அடியிலிருந்து 12 அடி வரை இருக்கலாம்.

**தேவைப்படும் இடவசதி:** குட்டிகளுக்கு 4 ச. அடி இடமும், பெட்டை ஆடுகளுக்கு 10–15 ச. அடி இடமும் மற்றும் கிடா ஆடுகளுக்கு 15–20 ச. அடி இடவசதியும் அளிக்க வேண்டும்.

**கொட்டகையின் கூரை:** தென்னங்கீற்று அல்லது பனை ஓலை அல்லது கோரைப்புல், வைக்கோல் மற்றும் சீமை ஓடு, நாட்டு ஓடு, சிமெண்ட் ஓடுகள், கான்கிரீட் தளம், பிளாஸ்டிக் ஓடுகள் கொண்டும் அமைக்கலாம்.

- கொட்டகை அமைப்பை முடிந்த வரை குறைந்த செலவில் ஏற்படுத்த வேண்டும்.

# தீவன மேலாண்மை

- ஆடுகள் மரங்களின் இலைகளை எளிதில் செரிக்கும் தன்மை உடையவை.
- பசுந்தீவனத்தோடு அடர்தீவனம் கலந்து அளித்தால் வேகமாக எடை அதிகரிக்கும்.

## ஆடுகளுக்கேற்ற தீவன மரங்கள்

- அகத்தி, சூபாபுல், கிளைரிசிடியா, கொடுக்காபுளி, அச்சா, முருங்கை, கல்யாண முருங்கை, வாகை, வேம்பு, வெள்வேல், உதியன், கருவேல், குடைவேல், ஆல், அத்தி, பலா, இலந்தை, நாவல் போன்றவை.
- ஒரு வளர்ந்த வெள்ளாட்டிற்கான பசுந்தீவனத் தேவை: நாள்தோறும் 5–6 கிலோ

| | | |
|---|---|---|
| புல்வகை பசுந்தீவனம் | – | 3.0 முதல் 3.5 கிலோ |
| பயறுவகைத் தீவனம் | – | 2.0 கிலோ |
| மரத்தழைகள் | – | 1.5 கிலோ |

## தாது உப்புக்கட்டியின் அவசியம்

- தாது உப்புக்கட்டியில் முக்கிய தாது உப்புகளான கால்சியம், பாஸ்பரஸ், சோடியம் குளோரைடு, பொட்டாசியம், கந்தகம், மக்னீசியம் மற்றும் நுண்ணூட்டச் சத்துகளான இரும்பு, துத்தநாகம், தாமிரம் மற்றும் மாங்கனீசு போன்றவையும் அடங்கி இருக்கின்றன.
- தாது உப்புக் கட்டியை ஆட்டுக்கொட்டிலில் கட்டித் தொங்கவிடுவதன் மூலம் வளரும் ஆடுகள், சினை மற்றும் குட்டி ஈன்ற ஆடுகள் தங்களுக்குத் தேவையான தாது உப்புகளைப் பெற ஏதுவாக இருக்கும்.
- வெள்ளாடுகளுக்கு அயோடின் சத்து கலந்த சமையல் உப்பு மிகவும் அத்தியாவசியமானது . இது தாது உப்புக்கலவை / உப்புக் கட்டியில் கலந்திருக்கும்.





தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை – 600 051

# ஆடுகளுக்கான அடர் தீவனம்

## அடர் தீவனத் தேவை அளவு

உடல் எடைக்கேற்ப அடர்தீவனம் அளிக்க வேண்டும்.

ஆடுகளின் உடல் எடையில் 1–1.5 சதவிகிதம் கொடுக்கப்பட வேண்டும்.

3–6 மாத வயது குட்டிகளுக்கு – தினம் 150 கிராம்

கடலைப்பொட்டு, உளுந்துத் தோல், பருத்தி விதைத் தோல், சோயா மொச்சைத் தோல், மரவள்ளிக் கிழங்கு மாவு, திப்பி, புளியங்கொட்டை மாவு, வேப்பம் பிண்ணாக்கு, கருவேலம் மற்றும் சீமைக் கருவேல் மர நெற்றுக்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி அடர்தீவனம் தயாரிப்பதன் மூலம் தீவனச் செலவைக் குறைக்கலாம்.

வெள்ளாடுகளுக்கு குறிப்பாக மேய்ச்சல் குறைவாக உள்ள காலங்களில் அடர்தீவனத்திற்கு மாற்றாக முழுத்தீவனம் தயாரித்து மேய்ச்சலுக்கு பின் கொடுப்பதன் மூலம் தீவனச் செலவை குறைத்து வருடம் முழுவதும் ஆடுகளை நல்ல முறையில் வளர்க்கலாம்.

### மாதிரி முழுத் தீவனம்

| தீவனம் | பங்கு (சதவிகிதம்) |
|---|---|
| சோளத் தட்டை | 30 |
| உலர்ந்த சூபாபுல் இலை | 20 |
| தவிடு | 17 |
| சீமைக் கருவேல் (அ) கருவேல் மரக்காய்/ நெற்றுகள் | 30 |
| தாது உப்புக் கலவை | 2 |
| உப்பு | 1 |



இத்தகைய முழுத் தீவனத்தை 20 கிலோ எடையுள்ள வெள்ளாட்டிற்கு மேய்ச்சலுடன் சேர்த்து நாளொன்றுக்கு 1 கிலோ அளித்து வந்தால் போதுமானது.


தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை – 600 051



# வெள்ளாடுகளுக்கு ஏற்ற பசுந்தீவனங்கள்

- **பசும் புற்கள் :** கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் (கோ–3, கோ–4), கினியா புல், வேலிமசால், முயல் மசால், தீவனச் சோளம் (கோ.எப்.எஸ் – 29) போன்றவை.
- **மரவகைகள்:** சூபாபுல், அகத்தி, வேப்பமரம், கொடுக்காப்புளி, மல்பெரி, கிளரிசிடியா, கருவேல், ஆல், பலா மற்றும் வாகை மரங்களின் இலைகளை பசுந்தீவனமாக அளிக்கலாம். நிழலில் வாட்டிக் கொடுப்பது நல்லது.

பசும்புற்களை சிறு சிறு துண்டுகளாக புல் வெட்டும் கருவி மூலமோ அல்லது கத்திக் கொண்டோ நறுக்கி தீவனத் தொட்டியில் தீவனமிட்டால் புற்கள் விரயமாவதைத் தவிர்க்கலாம்.






## பெட்டை மற்றும் கிடாக்களுக்கான பசுந்தீவனத் தேவை

- **பருவம் அடைந்த பெட்டை ஆடுகளுக்கு :** மேய்ச்சலுடன் புல் மற்றும் மர இலைகள் தினமும் 1 கிலோ அளிக்க வேண்டும்.
- **பொலி கிடாக்களுக்கு (இனச்சேர்க்கை காலங்களில்) :** 300–400 கிராம் அடர் தீவனம் மற்றும் 7–8 கிலோ பசுந்தீவனம்.


கம்புநேப்பியர் ஒட்டுப்புல்


வேப்பமரம்


வேலிமசால்


முயல் மசால்


கொடுக்காபுளி


கிளரிசிடியா


சூபாபுல்


பூவரசு


அகத்தி

# இனப்பெருக்க மேலாண்மை

| | | |
|---|---|---|
| பருவ வயது | | |
| பெட்டை ஆடுகள் | : | 10 – 12 மாதங்கள் |
| கிடாக்கள் | : | 12 – 14 மாதங்கள் |
| பெட்டைகளின் பருவ இடைவெளி | : | 21 நாட்கள் |
| சினைப் பருவம் | : | 24–38 மணி நேரம் |
| சினைக் காலம் | : | 150 நாட்கள் |
| கிடா + பெட்டையாடுகள் எண்ணிக்கை விகிதம் | : | 1 + 20 |
| தாயிடமிருந்து குட்டிகளை பிரிக்கும் வயது | : | 3 மாத வயதில் |
| பொலி கிடாவை இனப்பெருக்கத்திற்காக பயன்படுத்தும் காலம் | : | 2 வருடங்கள் (பிறகு கிடாவினை மாற்ற வேண்டும்) |

- சினைப்பருவ அறிகுறிகள் தென்பட்ட 12 முதல் 18 மணிநேரத்தில் கிடா ஆட்டுடன் இனச்சேர்க்கைக்கு விட வேண்டும்.
- சில ஆடுகள் தொடர்ந்து இரண்டு மூன்று நாட்கள் சினைப்பருவத்தில் இருக்கும். அவற்றை இரண்டாவது முறையாக ஒரு நாள் கழித்து மீண்டும் கிடாவுடன் சேர்க்க வேண்டும்.
- ஆடுகள் இனச்சேர்க்கை செய்த நாளை குறித்து வைக்க வேண்டும்.
- ஆடுகள் இரண்டு வருடத்தில் மூன்று முறை குட்டிகள் ஈனும்.
- குட்டி ஈன்ற பின் மூன்று மாதம் கழித்து மீண்டும் சினைப்பருவ அறிகுறிகள் தென்படும்போது இனச்சேர்க்கை செய்ய வேண்டும்.





# சினைப் பருவ அறிகுறிகள்

- ✪ ஆடுகள் அமைதியின்றிக் காணப்படும்.
- ✪ பிற ஆடுகள் மேல் தாவும்.
- ✪ கிடாவை நெருங்கிச் செல்லும். கிடா ஆடுகள் தன் மீது தாவ அனுமதிக்கும்.
- ✪ இனப்பெருக்க உறுப்பு சிவந்து வீக்கத்துடன் காணப்படும்.
- ✪ அடிக்கடி சிறுநீர் கழிக்கும்.
- ✪ கண்ணாடி போன்ற திரவம் பிறப்பு உறுப்பிலிருந்து வடிந்து கொண்டு இருக்கும்.





சில ஆடுகளில் சினைத் தருண அறிகுறிகள் அதிகம் தெரியாது. இத்தகைய ஆடுகளை, கிடாக்களின் உதவியுடன் கண்டுபிடித்துச் சினைபிடிக்க வைப்பது அவசியமாகும்.

# குட்டிகள் வளர்ப்பும், பராமரிப்பும்

- பிறந்த குட்டிகள் சிறிது நேரத்திற்குள் தாயின் மடியிலிருந்து சீம்பாலைக் குடிக்கும்; இல்லையெனில் சீம்பாலைக் குடிக்க உதவ வேண்டும்.

**சீம்பாலின் முக்கியத்துவம்:** சீம்பாலில்நோய் வராமல் தடுப்பதற்குரிய எதிர்ப்புச் சக்தியும் மற்றும் புரதம், வைட்டமின் சத்துக்கள் சாதாரண பாலில் உள்ளதை விட அதிகமாகவும் இருக்கும். சீம்பால் மலமிளக்கியாகவும் செயல்பட்டு குட்டிகளின் முதல் சாணத்தை வெளியேற்றுகிறது.

- குட்டிகளுக்கு குடற்புழு நீக்கம் முதல் மாதத்திலும், பிறகு 3 மாதத்திற்கு ஒரு முறையும் செய்ய வேண்டும்.



சீம்பால் குடித்தல்



புட்டி மூலம் பால் கொடுத்தல்



தொப்புள் கொடி அறுத்தல்

அதிக குட்டிகள் ஈன்ற தாய் ஆடுகளில் பால் பற்றாக்குறையை போக்க குட்டிகளுக்கு பசும்பால் கொடுக்கலாம்

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை – 600 051

# வெள்ளாட்டுப் பால் – சிறப்பம்சங்கள்





- சிறிய கொழுப்புத் துகள்களும், குறைந்த அளவு கொழுப்பும் கொண்டது.
- நன்கு செரிமானம் ஆகக்கூடியது.
- ஒரே நாளில் பல முறை பால் கறக்கலாம்.
- அனைத்து வயதினருக்கும் ஏற்றது.
- அயர்ச்சி மற்றும் மலச்சிக்கலுக்கு ஏற்ற மருந்தாகும்.



## பாலின் சத்துக்கள்

- 3.5 சதவிகிதம் புரதம், 4.2 சதவிகிதம் கொழுப்பு, 4.25 சதவிகிதம் மாவுச்சத்து அடங்கியுள்ளது.
- தரமான பன்னீர், தயிர் மற்றும் பாலாடைக்கட்டி போன்றவையும் தயாரிக்கலாம்.





# வெள்ளாட்டு இறைச்சி – சிறப்பம்சங்கள்

- அனைத்து மக்களும், மதத்தினரும் விரும்பும் இறைச்சி.
- உடல் எடையில் 45–52 சதவிகித இறைச்சி கிடைக்கும்.
- ஆட்டிறைச்சியில் 19.5 சதவிகிதப் புரதம், 9.5 சதவிகித கொழுப்பு மற்றும் 1 சதவிகித சாம்பல் சத்தும் உள்ளது.
- உபபொருட்களாக தோல், எலும்பு, இரத்தம், குளம்பு, கொம்பு, குடல் நாண், பித்த நீர், நாளமில்லா சுரப்பிகள் பயன்படுகின்றன.
- இறைச்சிப்பிட்டு, கட்லெட், கறி உருண்டை, எலும்பு சூப் மற்றும் இறைச்சி ஊறுகாய் தயாரிக்கலாம்.







தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை – 600 051



# தடுப்பூசி அட்டவணை மற்றும் குடற்புழுநீக்கம்

| தடுப்பூசி | முதல் தடுப்பூசி | தொடர் தடுப்பூசி | தடுப்பூசி அளிக்கும் காலம் |
|---|---|---|---|
| கோமாரி நோய் | 3 மாத வயதில் | பின்னர் ஆறு மாதத்திற்கு ஒரு முறை கால்நடை மருத்துவரின் ஆலோசனைபடி | ஜனவரி மற்றும் ஜுலை மாதம் |
| துள்ளுமாரி நோய் | 4 மாத வயதில் | ஆண்டிற்கு ஒரு முறை | ஜுலை / ஆகஸ்டு மாதம் |
| ஆட்டம்மை நோய் | 5 மாத வயதில் | ஆண்டிற்கு ஒரு முறை (தேவைப்படும் போது) | நோய் கண்ட இடங்களில் மட்டும் |
| ஆட்டுக் கொல்லி நோய் (பி.பி.ஆர் நோய்) | 5 மாத வயதில் | ஆண்டிற்கு ஒரு முறை | ஜுன் மாதம் |
| அடைப்பான் நோய் | 6 மாத வயதில் (நோய்க் கிளர்ச்சியின் போது மட்டும்) | நோய் கண்ட பகுதிகளில் வருடத்திற்கு ஒரு முறை | ஆகஸ்டு மாதம் (மழைக் காலத்திற்கு முன்) |
| இரணஜன்னி நோய் | – | – | குட்டிகள் பிறந்த பின் 2–3 வது நாட்களில் / ஆடுகளில் காயங்கள் ஏற்பட்டவுடன் |

## குடற்புழு நீக்கம்

| வ. எண் | குடற்புழு மருந்து | மருந்து அளிக்கும் காலம் | |
|---|---|---|---|
| | | முதல் மருந்து | தொடர் மருந்து |
| 1. | உருண்டைப்புழு மருந்து | மேய்ச்சலுக்கு அனுப்பிய பின் 20–30 நாட்களில் | வருடத்தில் 3 அல்லது 4 மாதத்திற்கு ஒரு முறை |
| 2. | நாடாப்புழு மருந்து | 2½ – 5 மாதம் | 6 மாதத்திற்கு ஒரு முறை |
| 3. | தட்டைப்புழு மருந்து | 6 வது மாதம் | மழைக்கு முந்தைய காலங்கள் |



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை – 600 051



# ஆடுகளைத் தாக்கும் நோய்களும் தடுப்பு முறைகளும்

## நுண்ணுயிரி மற்றும் நச்சுயிரி நோய்கள்

| | அறிகுறிகள் | தடுப்பு முறைகள் |
|---|---|---|
| அடைப்பான் நோய் | ✦ நோய் அறிகுறிகள் இல்லாமல் உடனே இறந்து விடும்<br>✦ ஆசனவாய், மூக்கு, காது களிலிருந்து கருஞ்சிவப்பு இரத்தம் வெளியேறும் | ✦ அனைத்து ஆடுகளுக்கும் தடுப்பூசி அளித்தல் அவசியம்.<br>✦ இறந்த ஆடுகளை எரிக்கவோ அல்லது ஆழமாக முறைப்படி புதைக்கவோ வேண்டும். |
| துள்ளுமாரி நோய் | ✦ இளம் வயது ஆடுகள் திடீரென இறந்து விடும்<br>✦ புதியதாக, பசுமையான புற்களை மேயும் ஆடுகளில் இந்நோய் ஏற்படும். சளி போன்ற வயிற்றுப் போக்கு, திடீர் இறப்பு, தீவனம் உட்கொள்ளாமை போன்ற அறிகுறிகள் காணப்படும். | ✦ புதிதாக முளைத்த புற்களை கொண்ட மேய்ச்சல் தரையை பயன்படுத்தக் கூடாது.<br>✦ ஆறு மாத வயதில் தடுப்பூசியும் பின்னர் வருடம் ஒரு முறையும் தடுப்பூசி அளித்தல்<br>✦ மழைக்காலத்திற்கு முன் தடுப்பூசி போடவேண்டும். |
| கோமாரி நோய் | ✦ வாய், நாக்கு, கால், மடி, குளம்புகளில் கொப்புளம் தோன்றி புண் ஏற்படுதல், உமிழ்நீர் சுரத்தல், உணவு உட்கொள்ளாமை | ✦ 8, 16 வார வயதில் தடுப்பூசி அளித்தல். பின்னர் ஆறு மாதத்திற்கு ஒரு முறை தடுப்பூசி போடவேண்டும். |
| தொண்டை அடைப்பான் | ✦ இளவயது ஆடுகளைத் தாக்கும், நோய் எதிர்ப்பு சக்தி குறையும் போது இந்நோய் கிருமிகள் தாக்கும். காய்ச்சல், மூச்சுத் திணறல், கழுத்து மற்றும் மார்புப் பகுதியில் வீக்கம் காணப்படும். மூக்கு, வாயிலிருந்து சளி ஒழுகும். | ✦ ஆன்டிபயாடிக் மருந்து கொடுத்து எளிதில் கட்டுப் படுத்தலாம். சிகிச்சை அளிக்காவிட்டால் 5–7 நாட்களில் இறக்க நேரிடும். நோய் தாக்கும் முன் தடுப்பூசி போடவேண்டும். |

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை – 600 051



# ஆடுகளைத் தாக்கும் நோய்களும் தடுப்பு முறைகளும்


## நுண்ணுயிரி மற்றும் நச்சுயிரி நோய்கள்

| | அறிகுறிகள் | தடுப்பு முறைகள் |
|---|---|---|
| ஆட்டுக் கொல்லி நோய் (பி.பி.ஆர்) | ✦ காய்ச்சல், வாயில் புண், கண்கள் மூக்கிலிருந்து நீர் வடிதல், வயிற்றுப் போக்கு, இளங்குட்டிகளில் இறப்பு அதிகம் | ✦ பி.பி.ஆர் தடுப்பூசி அளித்தல், நோயுற்ற ஆடுகளுக்கு ஆன்டிபயாடிக் மருந்து அளித்தல் |
| ஆட்டம்மை | ✦ வாய், கால்களின் உட்புறம், வால், பால்மடிகளில் கொப்புளங்கள், அதிக காய்ச்சல், உணவு உட்கொள்ளாமை | ✦ புண்களை கிருமி நாசினியால் கழுவுதல், ஆட்டம்மை தடுப்பூசி அளித்தல் |


சளி மற்றும் கண்களில் நீர் வடிதல்


வயிற்றுப் போக்கு மற்றும் சளி


வாயில் புண்கள்


பால் மடியில் கொப்புளங்கள்

# ஆடுகளில் ஒட்டுண்ணி நோய்களும், தடுப்பு முறைகளும்

- நோய் உண்டாக்குவதில் ஒட்டுண்ணிகள் பெரும் பங்கு வகிக்கின்றன.
- ஒட்டுண்ணிகளில் அக மற்றும் புற ஒட்டுண்ணிகள் என்ற இரு வகைகள் உள்ளன.
- அக ஒட்டுண்ணிகளில், புழு வகை மற்றும் ஓரணு ஒட்டுண்ணிகள் அடங்கும். உண்ணி, பேன், தெள்ளுப்பூச்சிகள் புற ஒட்டுண்ணிகளாகும்.

## தடுப்பு முறைகள்


மருந்து குளியல்

- கொட்டகைத் தரையை கெட்டியாகவும், சுத்தமாகவும் வைத்திருத்தல்.
- பிழுக்கைகளை அப்புறப்படுத்தி எருக்குழியில் இடுதல்.
- சமச்சீரான தீவனம் மற்றும் தரமான குடிநீர் அளித்தல்.
- புழுக்கைகளை பரிசோதிப்பதன் மூலம் குடற்புழுப் பாதிப்பை அறியலாம்.
- புற ஒட்டுண்ணிகளை நீக்க தகுந்த உண்ணி நீக்கி மருந்துகளை கொடுக்கலாம்.
- பூச்சிகொல்லி மருந்துகளை கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி நீரில் கலந்து ஆடுகளைக் குளிப்பாட்டலாம்.
- கொட்டகைகளின் உட்புறம் மற்றும் சுற்றுப்புறத்திலும் உண்ணி மருந்தைத் தெளித்து உண்ணிகளை கட்டுப்படுத்தலாம்.
- கால்நடைகளை ஒரே இடத்தில் மேயவிடாமல் இடம் மாற்றி மேய்த்தல் நல்லது.